# *புனித கோஸ்மாஸ் தமிமான் (-303)*

இவர்கள் இருவரும் இரட்டைப் பிள்ளைகள், அரேபியா நாட்டில் பிறந்த கிறிஸ்தவர்கள். வைத்தியத் தொழில் தேர்ச்சி பெற்றார்கள். இவர்கள் மக்களுக்குச் சேவை செய்தாலும், பணம் வாங்க மாட்டார்கள். மக்கள் மிக மதித்து வந்தார்கள். நோயாளிகளின் உடல்களையும், ஆன்மாக்களையும் குணப்படுத்தி வந்தார்கள். கிறிஸ்துநாதரது வல்லமையிலும், தங்களது அறிவைப் பயன்படுத்தி, அநேகரைக் குணப்படுத்தி வந்தார்கள்.

தியோக்ளேசியான் பேரரசன் காலத்தில் இவர்களைப் பிடித்து அதிகாரிகள் முன் கொண்டு போய் கடுமையாக உபாதித்து தலையை வெட்டிக் கொன்றார்கள்.

**சிந்தனை:**

வைத்தியர்கள் நோயாளிகளின் உடலுக்கு மாத்திரமல்ல, ஆன்மாவுக்கும் சேவை செய்ய வேண்டும். இவர்கள் தங்கள் அறிவில் மாத்திரம் மிஞ்சிய நம்பிக்கை வைக்கலாகாது. கடவுளின் வல்லமையில் அதிக நம்பிக்கை வைக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, நோயாளிகளின் உடலைப் போல் ஆன்மாவையும் நேசிக்கும் வரத்தை மருத்துவர் அனைவரும் அருளும்.